**திரு. கே. டி. கே. தங்கமணி :** பில்லை இன்ட்ரொடக்ஷன் பண்ணினாலும் கூட, இது எப்படி ஏற்றுக்கொள்ளப்படும் என்ற விஷயங்கள் . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அதைப்பற்றி எல்லாம் பிஸினஸ் அட்வைசரி கமிட்டியில் பேசிக்கொள்ளலாம்.

### 5. அறிக்கை அளித்தல்

### (அ) வினா எண் 299-க்கு போடப்பட்ட துணை வினாவிற்கு அளித்த விடையைத் திருத்தி அரிசன நல அமைச்சர் அளித்த அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** 4—3—1972-ம் நாளன்று 299-ம் எண் வினாவிற்கு திரு. க. நாகராசன் அவர்களால் எழுப்பப்பட்ட துணை வினாவிற்கு அளிக்கப்பட்ட விடையைச் சரிசெய்து மாண்புமிகு அரிசன நல அமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றை அளிப்பார்கள்.

**மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து :** தலைவரவர்களே, அந்த 299-ம் வினாவிற்கான துணைக் கேள்விக்கு அளித்த விடையைத் திருத்தி அறிக்கை @ ஒன்று மேஜைமீது வைக்கப்பட்டிருக்கிறது.

### (ஆ) இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகம்) துறை மீதான மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் திரு. பழனிவேல்ராஜன் அவர்கள் இந்து சமய அறக்கட்டளைகள் (நிர்வாகம்) துறையின் மீதான மேற்படி குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிப்பார்.

THIRU PALANIVEL RAJAN : Sir, I rise to present the report of the Estimates Committee on Hindu Religious and Charitable Endowments Administration Department.

### 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்

### (அ) தமிழ்நாடு 1973-ம் ஆண்டு சட்ட நுணுக்க உதவி, ஆலோசனை வழங்குதல் சட்ட முன்வடிவு

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** நான் இந்தச் சட்ட முன்வடிவை அறி உதவி, ஆலோசனை வழங்குதல் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

---

@ 420-422-ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது